# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

## "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

### ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு


**பதிப்பாசிரியர்கள்**

பேராசிரியர். ம. இரகுநாதன்

திரு. ஈ. குமரன்

திரு. க. அருந்தாகரன்



10, 11 ஜனவரி 2020

தமிழ்த்துறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,

இலங்கை.

| | | |
|---|---|---|
| **நூற்பெயர்** | : | **"தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு"** |
| **மொழி** | : | தமிழ் |
| **பதிப்பாசிரியர்கள்** | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| **முதற்பதிப்பு** | : | 10 ஜனவரி 2020 |
| **வெளியிடுவோர்** | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| **பக்க அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | 829 |
| **அச்சிட்டோர்** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# இயற்கை வளங்களும், திருக்குறளும்

# Natural Resources and Thirukkural


**கலாநிதி. (திருமதி) சுபாஜினி உதயராசா,**

சிரேஷ்ட விரிவுரையாளர்,

தலைவர், புவியியற்றுறை,

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை

*usubageo@gmail.com*



**ஆய்வுச் சுருக்கம்:**

உலகில் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் முன்னோடி இலக்கியமாகவும், சிறப்பான இலக்கியமாகவும் போற்றப்படுவது திருக்குறள் ஆகும். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருந்தாலும் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பயன்படும் ஒப்பற்ற நூல் ஆகும். திருவள்ளுவரால் இயற்றப்பட்ட, 'உலகப்பொதுமறை' என அழைக்கப்படும் திருக்குறளிலே பல்வேறு விடயங்களினைக் காணமுடிகின்றது. திருக்குறளில் வள்ளுவர் எடுத்துக் காட்டாத விடயங்களே இல்லை என்று கூறலாம். இயற்கை வளங்களும், திருக்குறளும் என்னும் இவ்வாய்வானது திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் இயற்கை வளங்கள் தொடர்பான கருத்துக்களை வெளிக்கொணர்தல் மற்றும் திருக்குறள் பற்றிய அடிப்படையான அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது. இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு விபரண ரீதியான ஆய்வாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வு தொடர்பாக பல இலக்கிய மீளாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. திருவள்ளுவர் இயற்கை வளங்கள் என்பதனுள் நிலம், நீர், காற்று, ஆகாயம், மழை, காடு, மலை, தாவரங்கள், பூக்கள், விலங்குகள், கனியவளங்கள் போன்றவற்றை பல்வேறு குறட்பாக்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். இந்தவகையில் இக்கட்டுரையானது பிற்பட்டகால ஆய்வாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாகவும் அமையும்.



**திறவுச் சொற்கள் :** திருக்குறள், இயற்கை வளங்கள், திருவள்ளுவர், நீர்வளம், நிலவளம், காட்டுவளம்.

**அறிமுகம் :**

உலகில் தோன்றிய இலக்கியங்களுக்கெல்லாம் முன்னோடி இலக்கியமாகவும், சிறப்பான இலக்கியமாகவும் போற்றப்படுவது திருக்குறள் ஆகும். இது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியிருந்தாலும் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் பயன்படும் ஒப்பற்ற நூல் ஆகும். திருவள்ளுவரால் இயற்றப்பட்ட உலகப்பொதுமறை என அழைக்கப்படும் திருக்குறளிலே பல்வேறு விடயங்களினைக் காணமுடிகின்றது. புவியியல், சூழல், இயற்கை வளங்கள், அரசியல், சமூகம், பொருளாதாரம், மக்கள் தொகை எனப் பல்வேறு கூறுகளை உள்ளடக்கிய ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்கள் இந்நூலில் உள்ளன. திருக்குறளில் வள்ளுவர் எடுத்துக் காட்டாத விடயங்களே இல்லை என்று கூறலாம். ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நான்கு வளங்கள் அவசியமானவை (முருகரத்தினம்,1973). அவை இயற்கை வளம், மக்கள் வளம், விளைவு வளம், செல்வ வளம் என்பனவாகும். இந்நான்கும் ஒரு நாட்டிற்கு இன்றியமையாதவை என்பது அவர் கருத்து. திருவள்ளுவர் இவற்றைப் பல்வேறு சொற்களாலும் பல்வேறு அடைமொழிகளோடும் விளக்குகின்றார். இவற்றில் முன்னிரண்டும் இயல்பாய் உள்ளவை / அமைபவை, அடிப்படையானவையும் ஆகும். பின்னிரண்டும் முயற்சியால் தோன்றுபவை. பின்னிரண்டினுக்கும் முன்னிரண்டும் காரணமாகின்றன. மனிதன் உயிர்வாழக் காற்று, நீர், உணவு அவசியம் வேண்டும். இம்மூன்றுமே கிடைக்காவிடில் உலக மனித சமுதாயம் அழிய வேண்டி வரும். அவற்றுள்ளும் முக்கியமானதாகக் காற்றும், நீரும் காணப்படுகின்றது (சுரேஸ்.கோ,2008). பண்பாட்டு வளர்ச்சியுடன் இணைந்த அறிவு வளத்தால் மட்டுமே மனித சமுதாயத்தைச் சிறந்த முறையில் வழிநடத்த இயலும் என்றுணர்ந்த வள்ளுவர், உலகின் நீர் வளமும், நில வளமும் பேணிக் காக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளார் (இந்திரகுமாரி,2018). உண்ணும் உணவாலும், பருகும் நீராலும் உயிரினங்கள் வாழ்கின்றன. உணவிற்கும், நீருக்கும் உயிரானது மழையே. உயிர்களும், பயிர்களும் வாழ மழையே துணை (அந்தோணிராஜ்,2011). இயற்கை வளமே பொருள் வாழ்விற்கெல்லாம் அடிப்படையானது. இதிலே முதன்மையான வளங்களாக நீர் வளம், கடல் வளம், மலை வளம், நில வளம், காற்று வளம், கனிய வளம் முதலியவற்றை திருவள்ளுவர் கூறுகின்றார் (முருகரத்தினம்,1973). வள்ளுவர் இவ்வளத்தின் தேவையையும் சிறப்பையும் நன்கு உணர்ந்திருக்கின்றார். இவை நாட்டிற்கு உறுப்புக்கள் போன்று இன்றியமையாதவை பற்றி அவர் பல்வேறு குறட்பாக்களில் குறிப்பிடுகின்றார். இவ்வாறாக திருக்குறளில் பரவிக் காணப்படும் இயற்கை வளங்களைப் புவியியல் நோக்கில் இக்கட்டுரையானது ஆராய்கின்றது.

**ஆய்வின் நோக்கம் :**

இயற்கை வளங்களும், திருக்குறளும் என்னும் இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராயப்பட்டுள்ளது.

* திருக்குறளில் கூறப்பட்டிருக்கும் இயற்கை வளங்கள் தொடர்பான கருத்துக்களை வெளிக்கொணர்தல்
* திருக்குறள் பற்றிய அடிப்படையான அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல்.

**இலக்கிய மீளாய்வு :**

இயற்கை வளங்கள் பற்றி பல்வேறு நூல்களிலுள்ள பல கட்டுரைகள் மூலம் அறிந்துகொள்ள முடிகின்றது. முருகரத்தினம் என்பவர் (1973) "குறள் கண்ட பொருள் வாழ்வு" என்னும் நூலில் வள்ளுவர் கண்ட வளநாடு என்னும் கட்டுரையில் இயற்கை வளங்களைப் பற்றிக் குறிப்பிடுகிறார். அந்தக் கட்டுரையில் நீர் வளம், மலை வளம், வான் வளம், காற்று வளம், நில வளம், கனிய வளம் போன்ற இயற்கை வளங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். வள்ளுவரும், வாழ்வியலும் என்னும் நூலில் சுரேஸ் என்பவர் (2008) மக்களுக்குப் பயன்படக்கூடிய நீராதாரங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். நீர் இரண்டு வகைகளில் கிடைக்கின்றது. ஒன்று வானத்திலிருந்து பொழிகின்ற மழையின் மூலமாகவும் மற்றொன்று நிலத்திலிருந்து கிடைக்கின்ற அருவி நீர், ஆற்று நீர்க் கிணற்று நீர் மூலமாகவும் பெறப்படுகின்றது. தற்காலத்தில் மூன்றாவதாக கடல் நீரையும் சுத்திகரிப்பதன் மூலம் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்துள்ளனர். மிகுதியான இயற்கை வளங்களாக பெற்ற நாடே சிறந்த நாடு என குறிப்பிடுகின்றார். இதனை பின்வரும் குறட்பாவில் வள்ளுவர் எடுத்துக் காட்டுகின்றார்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" குறள் - 737

இதன் மூலம் இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தை அறிய முடிகின்றது. மனிதன் உயிர்வாழக் காற்று, நீர், உணவு, அவசியம் வேண்டும் (சுரேஸ்.கோ,2008). இம்மூன்றுமே கிடைக்காவிடில் உலக மனித சமுதாயம் அழிய வேண்டி வரும். அவற்றுள்ளும் முக்கியமானதாகக் காற்றும், நீரும் காணப்படுகின்றது. உலகில் உயிர்கள் வாழ்வதா?, வேண்டாமா? என்பதைத் தீர்மானிக்கும் அதிகாரம் இயற்கை அன்னையாகிய வான் மழைக்கு மட்டுமே உண்டு. வான் மழை இன்றேல் அருவிகள் வற்றி, நிலத்தடி நீர் குறைந்து, கடுமையான வரட்சி, பற்றாக்குறையை ஏற்படுத்தி, உயிர்களுக்குள் பகையை ஏற்படுத்தி, உயிர்களை அழிந்து போகவும் செய்யலாம். எனவே இயற்கையானது நல்ல மழைப் பொழிவை ஏற்படுத்தினால் எந்த உயிரினங்களும் அழியாது என ஆசிரியர் கூறுகின்றார். இதனையே வள்ளுவர் பின்வரும் குறட்பாவில் எடுத்துக் காட்டியுள்ளார்.

"கெடுப்பதூஉம் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கு
எடுப்பதூஉம் எல்லாம் மழை" (குறள் - 15)

ஆறுகள் இல்லாத பகுதிகளில் விவசாய நிலங்களில் நீரைப் பெற்றுப் பயிர் செய்வதற்காக உழவர்கள் நிலத்தின் ஒரு பகுதியை ஆழப்படுத்துவார்கள் (சுரேஸ்.கோ,2008). அதனைப் போலவே ஆற்றங்கரைகளில் மணற்பாங்கான பகுதிகளில் நீரைப் பெறுவதற்காக மணலைத் தோண்டினால் நீர் கிடைக்கும். எந்த அளவு ஆழமாகத் தோண்டுகிறார்களோ அந்தளவு அதிகமாக நீர் சுரக்கும். இதனையே வள்ளுவர் "தொட்டனைத்து ஊறும் மணற்கேணி.... (குறள்-396) என குறிப்பிடுகின்றார்.

ஒவ்வொரு வளங்கள் பற்றியும் தனித்தனியாகக் கருத்துக்களை ஆராய்வோம். இயற்கை வளங்களுள் சிறந்தது நிலவளம் என அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இயற்கை உணவிற்கும், செயற்கை உணவிற்கும் நிலமே அடிப்படையாகின்றது. "நிலம் என்னும் நல்லாள்" (குறள் - 40) என நிலத்தைப் போற்றுகின்ற அவர் அது பற்றி,

"தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு" (குறள் - 731)

எனக் குறிப்பிடுகின்றார். விளையுள் என்பதே நிலத்திற்கு அவர் வழங்கிய சொல், தள்ளா விளையுள் என்பதற்குப் பரிமேலழகர் " குன்றாத விளையுளைச் செய்வோர்" என உரை வகுக்கிறார். விளையுள் என்ற சொல் விளைவு, விளைச்சல் என்னும் பொருள் தருவதாகத் தோன்றுகின்றது. விளை என்னும் வினைப் பகுதியிலிருந்து அது தோன்றியது என்பதும் இதனை வலியுறுத்துகின்றது. ஆனால் விளையுள் என்பதற்கு "விளை நிலம்" என்னும் பொருளுண்டு. "பெருநீர் விளையுள் எம் சிறுநல் வாழ்க்கை" என நெய்தல் வாழ்க்கையினை நற்றிணை 45 குறிப்பிடுகிறது. "கடல் நீரை விளை வயலாகக் கொள்ளுகின்ற எமது சிறிய நல்ல வாழ்க்கை" என அதற்கு உரை கூறப்படுகின்றது. இச் சான்றுகள் மணக்குடவர் பரிப்பெருமாள் உரைக் கருத்துக்களே சரி என வற்புறுத்துகின்றன. சங்க இலக்கியங்களும் இதற்கு சான்று சொல்கின்றன.

" முடந்தை நெல்லின் கழையமை கழனிப்
பிழையா விளையுள் நாடகப் படுத்து"
(பதிற்றுப் பத்து 32, 13 – 14)

"மழை யொழுக்கறாப் பிழையா விளையுட்
பழையன் மோகூர்......."
(மதுரைக் காஞ்சி 507)

"பிழையா விளையுட் பெருவளம் சுரப்ப"
(சிலம்பு 11, 28)

"மழைவளம் தருதலின் மன்னுயிர் ஓங்கிப்
பிழையா விளையுளும் பெருகியது அன்றோ"
(மணிமேகலை 11, 90 – 181)

இங்கெல்லாம் பொதுவாக விளைச்சல் என்றே பொருள் சொல்லப்படுகின்றது. விளையுள் என்பது பெரும்பாலும் நாட்டிற்கும், ஊருக்கும் அடைமொழியாக வந்திருப்பதை இங்கெல்லாம் காணலாம். நாட்டிற்குப் பெருமை தருவதாக வயலையும், நில வளத்தையுமே அடையாகக் கூறுதல் நாட்டுப் படல மரபு. இம்மரபுக்குச் சங்க காலம் தொட்டு இலக்கியங்கள் சான்று பகர்கின்றன.

இதுவரை கூறியவற்றில் வள்ளுவர் இயற்கை வளங்களுள் சிறந்தது நில வளம் என்பது குறிப்பிடத் தக்கது. நிலத்திற்கு அவர் குறிப்பிட்ட அடைமொழியான "தள்ளா" (பிழையா, தப்பா) என்பது அதன் பயனை அருமையாக எடுத்துரைக்கும் அடைமொழியாக விளங்குகின்றது.

திருக்குறள் விதந்துரைக்கும் இயற்கை என்னும் கட்டுரையில் செல்வதியம்மா (2017) என்பவர் நிலம், நீர், ஆகாயம், மரங்கள், பூக்கள், செடிகள், கொடிகள் போன்றவற்றைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்.

"இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு" (குறள் - 737)

என்னும் குறளினூடாக ஒரு நிலவளம் எவ்வாறு இருக்க வேண்டு என்பதனைக் காட்டி நிற்கின்றார். அதாவது ஒரு நாடு நிலைபெற வேண்டுமானால் அதனது நிலம் நன்கமைய வேண்டும். அங்கு மலை, ஏரி, நீர், அரண், என்பன சரிவர அமையப் பெற வேண்டும் என்கின்றார். இங்கே நிலம் நன்கமையாவிடின் நாட்டின் நிர்வாகமும், வெற்றியும் சீர்குலைந்துவிடும் என நிலத்தின் தன்மையை வள்ளுவரும் விதந்துரைத்திருக்கின்றார். நீர் வளத்தின் முக்கியத்துவத்தை "நீர் இன்றி அமையாது உலகு" என வள்ளுவர் குறிப்பிட்டுள்ளார். 'இயற்கைப் பின்னணியில் திருக்குறளும் ஜப்பானிய ஹைக்கூக் கவிதைகளும்' என்னும் கட்டுரையில் உலகின் நில வளமும், நீர் வளமும் பேணிக் காக்கப்பட வேண்டும். வான் மழை இல்லை எனில் சமுதாயத்தில் ஒழுக்கம் நிலைத்திருக்காது (இந்திரகுமாரி, 2018) என குறிப்பிடப்பட்டுள்ளது. திருக்குறளில் மழை (அந்தோணிராஜ்,2011) என்னும் கட்டுரையில் மழையை பல்வேறு முறைகளில் அதன் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டியுள்ளார். உண்ணும் உணவாலும், பருகும் நீராலும் உயிரினங்கள் வாழ்கின்றன. உணவிற்கும் நீரிற்கும் உயிரானது மழையே. உயிர்களும், பயிர்களும் வாழ மழையே துணை என மழைவளத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டி உள்ளார்.

இவ்வாறு பல்வேறு கட்டுரைகளில், இயற்கை வளங்கள் பற்றிய செய்திகள் திருக்குறளில் பரவலாகக் கூறப்பட்ட முறையை எடுத்துக் காட்டப்பட்டுள்ளன அவை இவ்வாய்வினை மேற்கொள்ள பயனுடையதாக அமைந்துள்ளன.

**தரவு சேகரிப்பும், ஆய்வு முறையும் :**

இவ் ஆய்வானது இரண்டாம் நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்விற்குத் தேவையான தகவல்கள் புத்தகங்கள், ஆய்வு நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், பருவகால இதழ்கள், ஆய்வு மாநாட்டு கட்டுரைத் தொகுப்பு நூல்கள் மற்றும் கட்டுரைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. இயற்கை வளங்கள் பற்றிய கருத்துக்களையும் வள்ளுவரின் இயற்கை வளங்கள் பற்றிய குறட்பாக்களையும் மிகக் கவனமாக ஆராய்ந்து, கற்றுத் தேவையான இடத்தில் பொருத்தமான எடுத்துக்காட்டுகள் மூலம் விபரண ரீதியாக இக்கட்டுரையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளன.

**ஆய்வின் முடிவுகள் :**

இயற்கை வளங்களான நீர் வளம், நில வளம், கடல் வளம், காட்டு வளம், காற்று வளம், கனிய வளம், மலை வளம் பற்றிய கருத்துக்களைத் திருக்குறளில் காணலாம். இந்த வகையில்

“விளைவு தப்பாத” என அதற்குப் பொருள் கொள்ளலாம். இதனால் உழுதொழில் குறித்தே இவ்வாறு அடைமொழி தரப்பட்டது எனவும் கருதலாம். நில வளம் கூறப்பட்டது என்பது மட்டுமல்ல அது உழுதொழிலுக்கும் ஒரு காரணியானது என்பதும் சுட்டப்பட்டது எனக் கொள்ளலாம்.

அடுத்து இயற்கை வளங்களில் ஒன்றான நீர் வளம் பற்றித் திருக்குறளில் கூறப்பட்ட கருத்துக்களை ஆராய்வோம். “நீர் இன்றி அமையாது உலகு” என்பது அனைவரும் அறிந்ததே. அது உணவாதல் மட்டுமல்லாது உணவினை ஆக்கவும் பயன்படுகின்றது. நீர் இல்லையேல் உணவு தரும் உழுதொழிலே இல்லை எனலாம். இன்றைய மக்கள் வாழ்வில் நீர் உழுதொழிலுக்கு மட்டுமல்லாமல் பிற தொழிலுக்கும் பெரிதும் பயன்படுகின்றது. அதாவது விவசாயத் தொழிலாக இருந்தாலும் அடிப்படையானது நீர். அந் நீரானது வானத்தில் இருந்து வரும் மழை நீராகவோ, அருவிகளிலிருந்து வருகின்ற ஊற்று நீராகவோ, நிலத்திற்கு அடியிலிருந்து பெறப்படுகின்ற நிலத்தடி நீராகவோ, கடலில் இருந்து சுத்திகரிக்கப்படுகின்ற நீராகவோ இருக்கலாம். அத்தகைய நீரின் அவசியத்தை அன்றே விளக்கியுள்ளார் வள்ளுவர். அதனை

“நீரின்று அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு” (குறள் - 20)

ஆற்று நீருக்கும் ஊற்று நீருக்கும் அடிப்படையாக அமைந்திருப்பது மேல்நீர் எனப்படும் மழை நீர். மழை பெய்யும்போது மட்டும் பயன் தருவது. ஊற்று நீரும், ஆற்று நீரும் நின்று பயன் தருவன. மாரி காலத்தில் மட்டுமே மழையின் பயனைப் பெறலாம். ஏனைய காலங்களில் ஆற்று நீரும், ஊற்று நீரும்தான் பயன் தரும். மழை ஆண்டு முழுவதும் பெய்தல் அரிது. இலங்கையில் அதற்குப் பருவங்கள் உண்டு. மாரி காலத்தில் பெய்த மழையினை ஏரியாகவும், குளங்களாகவும் தேக்கி வைத்துக் கொள்ளலாம். அவையும் வரண்டபோது ஆழ் கிணறுகள் தோண்டி நீர் பெறலாம். இதனால் ஆண்டு முழுவதும் பயிர்த் தொழில் செய்யக்கூடும். இலங்கையில் விவசாயிகளில் பெரும்பாலானோர் வான் நோக்கி வாழும் குடிகள். மழையில்லாத காலத்தில் வழியறியாது திகைப்பவர்கள்.

மழையின் வளத்திற்கு ஏற்பவே ஒரு நாட்டின் வளமும் வாழ்வும் அமைகின்றது. இவ்வுண்மையினை அறிந்தே வள்ளுவர் வான் மழையைப் போற்றுகின்றார். இதனாலேயே “வான் சிறப்பு” (அதிகாரம் 2) என்னும் அதிகாரத்தையே படைத்துள்ளார். “மாமழை போற்றுதும்” என்பது சிலம்பு சுட்டிய தமிழ் மரபு. அம்மரபின் காவலராய் வள்ளுவர் விளங்குகின்றார். வானின்று உலகம் வழங்கி வருதலால் மழை அமிழ்தம் என்று வள்ளுவர் அதனை வாழ்த்திவிட்டு அவ்வதிகாரம் முழுவதும் அதன் பயனையும், பெருமையையும் பலபட எடுத்துரைக்கின்றார். வளம் கொழிக்கும் நாடு ஒன்றை வள்ளுவர் காண விளைகிறார். என்பது அவர் கருத்துக்களால் நன்கு விளங்குகின்றது.

வள்ளுவர் வான் சிறப்பு என்னும் அதிகாரத்தில் மழை வளத்தின் அறுவகைப் பயன்களைச் சுட்டிக் காட்டுகிறார். இவற்றுள் மூன்றைப் பொருளியல் தன் பொருளாகப் போற்றுகிறது.

முதற்பயன் அதுவே உணவாதல் :

“துப்பார்க்குத் துப்பாய தூஉம் மழை” (குறள் – 12)

துப்பு என்பது உணவு இரண்டாவது பயன் உலகத்து உயிர்களுக்குப் பசிபோக்கும் உணவினை உண்டாக்குதல் :

“துப்பார்க்குத் துப்பாய துப்பு ஆக்கி....” (குறள் – 12)

“விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்து

உண்ணின்று உடற்றும் பசி” (குறள் – 12)

மக்கள் தவிர மற்ற உயிர்கள் எல்லாம் இயற்கையில் இயல்பாகக் கிடைப்பவற்றைத் தம் உணவாகவும், இரையாகவும் உட்கொள்ளுகின்றன. இவ்வுணவும் இரையும் தாவரங்களும், பிற உயிர்களுமாகும். இவற்றின் வாழ்விற்கு மழை இன்றியமையாதது என்பது கூறாமலே விளங்கும்.

மூன்றாவது பயன் மக்களுக்குத் தேவையான உணவுப் பண்டங்களை விளைவு செய்யும் உழு தொழிலுக்கு நீர் தரல் :

ஏரின் உழாஅர் உழவர் புயல் என்னும்

வாரி வளம் குன்றிக் கால் (குறள் – 14)

நான்காவது பயன் உலகின் தாவர இனங்கள் வாழ்வதற்கு நீர் தரல் :
விசும்பின் துளிவீழின் அல்லாள் மற்று ஆங்கே
பசும்புல் தலை காணப அரிது (குறள் – 16)
இக்குறள் குறிப்பாக காடுபடு செல்வதையும் ஓரளவு மலைபடு செல்வதையும் குறிக்கிறது எனக்கொள்ளலாம்.

ஐந்தாவது பயன் கடற் செல்வத்திற்குத் துணையாதல் :
நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும் தடிந்து எழிலி
தான் நல்காது ஆகி விடின் (குறள் – 17)

முத்து, பவளம், மீன் போன்ற வாழ்க்கைக்கு நன்னீராகிய மழை தேவை போலும். கடல் நீர்மை குன்றுதலாவது “நீர் வாழ் உயிர்கள் பிறவாமையும், மணி முதலாயின படாமையுமாம்” எனப் பரிமேலழகர் இதனை விளக்குவர்.

ஆறாவது பயன் சமய ஒழுக்கங்களும் நடைபெறத் துணையாதல் :
சிறப்போடு பூசனை செல்லாது வானம்
வறக்கு மேல் வானோர்க்கும் ஈண்டு (குறள் – 18)

தானம் தவம் இரண்டும் தங்கா வியனுலகம்
வானம் வழங்காது எனின் (குறள் – 19)

பூசனையும், தானமும், தவமும் நடைபெற உணவுப் பொருள்களும் மக்கள் நல்வாழ்வும் தேவை என்பதை இக்குறள்கள் குறித்து நிற்கின்றன.

வான் சிறப்பில் வள்ளுவர் உழவின் வழிபாடும் நிலம்படு செல்வமாகிய விளைவையும் காடுபடு செல்வத்தையும், கடல்படு செல்வத்தையும் குறிப்பிடுதல் இன்றைய பொருளியல் அறிஞர் போற்றுவதற்குரியது. காடுபடு வளமும் கடல்படு வளமும் தாமே தொழில்களாக அமைதல் மட்டுமல்லாது பிறதொழில்களுக்கும் முதற்பொருளைத் தருகின்றன. இவையனைத்திற்கும் மழையே முதற் காரணமாக அமைந்திருப்பதைக் கண்டுரைத்த வள்ளுவர் திறம்தான் இங்கே குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இயற்கை வளமாகிய நீர் வளத்தைக் கல்வியுடனும் தொடர்புபடுத்திக் கூறியுள்ளார். ஆறுகள் இல்லாத பகுதிகளில் விவசாய நிலங்களில் நீரைப் பெற்றுப் பயிர் செய்வதற்காக உழவர்கள் நிலத்தின் ஒரு பகுதியை ஆழப்படுத்துவார்கள். அதனைப் போலவே ஆற்றங்கரைகளில் மணற்பாங்கான பகுதிகளில் நீரைப் பெறுவதற்காக மணலைத் தோண்டினால் நீர் கிடைக்கும். எந்தளவு ஆழமாகத் தோண்டுகிறார்களோ அந்தளவு அதிகமாக நீர் சுரக்கும். இவற்றைப்போலவே அறியாமை என்னும் இருளை நீக்கி அறிவொளியைப் பெறுவதற்காக பலவகை நூல்களைக் கற்றால் கல்வி கற்கும் அளவிற்கு கல்வியாகிய நீரூற்றுப் பெருகும். பலவகையான அறிவு வளரும். அவ்வறிவினால் தன்னுடைய வாழ்விலும் ஒளி பிறக்கும் என்கிறார் வள்ளுவர். இதனைர் பின்வரும் குறட்பாக்கள் மூலம் எடுத்துக் காட்டுகின்றார்.

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்து ஊறும் அறிவு" (குறள் - 369)

இவ்வாறு திருவள்ளுவர் இயற்கை வளங்களுள் ஒன்றான நீர்வளத்தினைப் பற்றிப் பல்வேறு கோணங்களில் ஆராய்ந்துள்ளார். நீரின் பயன்பாடு, அதன் முக்கியத்துவம், நீரின் வகைப்பாடுகள் அதாவது மேற்பரப்பு நீர், தரைக்கீழ் நீர், மழை எனப் பல்வேறு கோணங்களில் நீர் வளத்தினை வெளிக்கொணர்ந்துள்ளார்.

அடுத்து இயற்கை வளங்களுள் ஒன்றான ஆகாயத்தைப் பற்றித் திருக்குறளில் வள்ளுவர் கூறியவற்றை நோக்கின் ஒரு நாட்டின் வளம் நின்று நிலைபெற உறுதுணை புரிவது ஆகாயமே. இது வள்ளுவர் உணர்த்தும் பிரதான விடயமும்கூட. இதனை அவர் கைக்கொள்ளும்போது "வான் சிறப்பு" எனக் கொண்டுள்ளார். ஒரு நாட்டின் வளமும் வாழ்வும் மழையினைப் பொறுத்தமைகின்றது. இதனை "வானின்று உலகம் வழங்கி வருதலால்" எனும் குறட்பா நமக்கு தெளிவுபடுத்துகின்றது. வள்ளுவர் ஆகாயத்தினைத் தனியொரு வளமாகச் சிறப்பாக கூறாது மழை வளத்தினை விளக்குவதனூடாக ஆகாயத்தையும் ஓர் இயற்கை வளமாகச் சிறப்பித்துக் காட்டியுள்ளார்.

இவற்றை அடுத்து நாட்டிற்கு வேண்டிய இயற்கை வளங்களில் ஒன்றாக மலை வளத்தையும் குறிப்பிடுகின்றார். மலையிலே அணியும், பொன்னும் கிடைக்கும் என்பதைப் பண்டைத் தமிழ்

இலக்கியங்களால் அறிகிறோம். மலையில் காடு இருக்கும். காட்டில் பல்வேறு மரங்களும், உயிர்களும் வளங்களே. தேக்கும், மூங்கிலும், அகிலும், ஆரமும், பிறவும் பண்டு பரக்கப் பேசப்பட்டன. குன்றக் குறவர் செங்குட்டுவனுக்குக் கையுறையாகத் தந்த மலைபடு பொருட்கள் மலை வளத்தின் இயல்பினை நன்கு புலப்படுத்துகின்றன. நிலத்திலும் காடு உண்டானாலும் வள்ளுவர் காட்டினையும் சேர்த்தே வாய்ந்த மலை என்று கூறியிருக்க வேண்டும். மணக் குடவரும் பரிப்பெருமாளும் வாய்ந்த மலை என்பதற்குப் "பயன்படும் மலை" என்ற உரை வகுக்கின்றனர். பரிமேலழகரும் "தன்வளம் தருதலால் வாய்ந்த மலை" என்றார். இன்றைய பொருளியல் அறிஞர்கள் காடும் மலையும் ஒரு நாட்டின் பொருளாக்கத்திற்குப் பயன்படும் பெருவளங்கள் என மதிப்பிட்டுப் போற்றுகின்றனர். இலங்கையின் மத்திய மலை நாட்டில் உள்ள மலை வளங்களும் குறிப்பிடத்தக்கவை. ஏராளமான அருவிகளும், நீர் வீழ்ச்சிகளும், அடர்ந்த காடுகளும் இங்கே காணப்படுகின்றன. இவை அனைத்தும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவருகின்றன. இதனால் இலங்கையின் வருமானமும் அதிகரிக்கின்றது. இவ்வகையில் மலை வளமும் முக்கியமான ஓர் இயற்கை வளமாகும்.

இவற்றை விடுத்து வள்ளுவர் காட்டும் ஏனைய இயற்கை சார் வளங்களை நோக்கின் மரங்கள், பூக்கள், விலங்குகள், பறவைகள் செடிகள், கொடிகள் என கூறலாம். இதில் மரங்கள் பற்றி நோக்கும்போது "மூங்கில் மரம், வற்றல் மரம், முள் மரம், நச்சு மரம், மருந்து மரம், காய்க்கும் மரம், பழ மரம் என்பவற்றை எடுத்துக் காட்டியுள்ளார். உதாரணமாக மூங்கில் மரத்தினைச் சுட்டும்போது "அமையார்தோள், வேய்த்தோள்" எனவும் முள் மரத்தினைக் காட்டும் போது பெயரற்ற நிலையில் " இளையதாக முண்மரம், கொல்க" என்றும், மருந்து மரத்தினை "தப்பா மரம்" என்றும் அதனது இலை தளிர், பட்டை, வேர், முதலியன எல்லாம் மருந்தாகப் பயன்படும் எனக் குறிப்பிடுகின்றார். காய்க்கின்ற மரத்தினைக் காட்டும்போது "கனிந்த மரத்தின் கல்லடி, சில்லடி" என்பதில் அம்மரம் கருந்தினாலும் அனைவருக்கும் பயன்படும் என்றும் அதனது அருமை பேசப்படுவது நோக்கத்தக்கது. பூக்கள் பற்றிக் கூறும்போது" அனிச்சம் பூ, குவளைப் பூ, தாமரைப் பூ, நீர்ப் பூக்கள் என்பன வள்ளுவரால் குறிப்பிடப்பட்டுள்ளன.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து (குறள் – 90)

என்பதிலே அனிச்சம் பூவினது மென்மையினைக் காட்டி நிற்கின்றார். குவளைப் பூவினைக் காட்டும்போது அது மேல் நோக்கி வளர்வதனை "வெள்ளத் தனைய மலர் நீட்டம்" எனக் காட்டுகின்றார்.

அடுத்து வள்ளுவர் காட்டும் விலங்குகளை நோக்கின் யானை, குதிரை, பசு, காளை, ஆடு, நரி, புலி முதலியன எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதில் யானை அதிகளவான இடங்களில் பேசப்பட்டுள்ளது. யானையினை மக்கள் பொறிவைத்துப் பிடிப்பதையும், அது உதவும் நிலைகளையும் காட்டுகின்றார். நன்கு பழக்கப்பட்ட குதிரை போரில் சளைக்காத தன்மையையும் அதேவேளை பயிற்றப்படாத குதிரை மன்னனைத் தள்ளி விட்டு ஓடுகின்ற தன்மையினையும் காட்டுகின்றார். கவரி மானைக் காட்டுகின்றபோது அதனது முடி ஒன்று வீழினும் தன்னுயிரை

மாய்த்து விடுகின்ற தன்மை பெற்றது என்றும், நரி தந்திரமுள்ளது என்றும், பசுவினை வீட்டில் வைத்து வளர்க்கக் கூடியதென்றும் அதற்கு நீர், உணவு என்பன முறையே கொடுக்க வேண்டும் என்றும், காளை வலிமையுடையதென்றும் காட்டும் வள்ளுவர் பாம்பு புழு என்கின்ற ஊர்வன நிலைகளையும் கைக்கொண்டுள்ளார். பறவைகளிலே கோட்டான், காகம், கொக்கு என்பவற்றை உவமித்துக் காட்டுவதோடு நீர் வாழ்வனவற்றுள் ஆமை, முதலை, மீன் முதலியவற்றையும் எடுத்துக் காட்டியுள்ளார்.

அடுத்து இயற்கை தரும் வளங்களுள் சிறந்தது கனிய வளம், காற்று வளம் குறிப்பிடத்தக்கது. இவை எல்லாம் 17ஆம், 18ஆம் நூற்றாண்டுகளில் தொழிற் புரட்சி ஏற்பட்ட பின்னர் பயன்பட்டுச் சிறப்புற்றன. கனிய வளம் பெரும் தொழில்களுக்கு முதற் பொருளாயிற்று. இந்நிலை வள்ளுவர் காலத்தில் இல்லை. ஆதலால் குறளும் குறிப்பிடாமல் போனதில் வியப்பில்லை. இரும்பின் பயனும், பொன், வெள்ளி ஆகியனவற்றின் பயனும் திருவள்ளுவர் காலத்தில் அறியப்பட்டிருந்தன. குறளிலும் இதற்குச் சான்று உண்டு. இரும்பை "இரும்பொன்" என்றும் வெறும் "பொன்" என்றும் அன்று மக்கள் வழங்கினர். தங்கம் "செம்பொன்" எனப்பட்டது. வள்ளுவர் "தூண்டிற் பொன்" பற்றிக் குறிப்பிடுகின்றார் (குறள் - 931) பொன்னுரைத்து ஆயும் "கட்டளைக்கல்" (குறள் - 505) பற்றியும் குறிப்புக்கள் தருகிறார் அவர். இதற்குச் சங்க இலக்கியங்களிலும் சான்றுகள் உண்டு. ஆனாலும் கனிய வளங்கள் பற்றிய தொழில்கள் அன்று குறிப்பிடத்தக்கதாக இல்லை போலும் குறட்பாக்களிலும் இது இடம் பெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை :**

இவற்றைத் தொகுத்து நோக்கும்போது திருவள்ளுவர் இயற்கை வளங்களின் முக்கியத்துவத்தையும் அதன் தேவைகளையும் அதாவது அவற்றின் பயன்பாடுகளையும் பல்வேறு குறட்பாக்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளமை தெளிவாகின்றது. இயற்கை வளங்களான நிலவளம், நீர் வளம், காடுகள், ஆகாயம், தாவரங்கள், காற்று, விலங்குகள், பூக்கள் என்பவற்றைக் கற்பவர்கள் விளங்கும் வகையில் பல்வேறு குறட்பாக்கள் மூலம் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். எடுத்துக் காட்டாக உலக மனிதர்கள் எப்படி வாழ வேண்டும்? எப்படி உதவ வேண்டும்? என்பதை எடுத்துக் கூறுவதற்காக வள்ளுவர் வான் மழையின் சிறப்புக்களை ஓர் அதிகாரத்தில் சேர்த்துள்ளார். மனிதன் உயிர் வாழக் காற்று, நீர், உணவு அவசியம் வேண்டும். இம் மூன்றுமே கிடைக்காவிடில் உலக மனித சமுதாயம் அழியவேண்டிவரும். இயற்கை அன்னை உலகிற்கு வேண்டியவற்றைத் தடையின்றி வழங்கினால்தான் ஒவ்வொரு உயிரும் தனக்கு வேண்டியவற்றைத் தானே தேடிக்கொள்ள முடியும். இயற்கை வளங்களை மிகக் கவனமாக நாம் பயன்படுத்துவதோடு எதிர்கால சந்ததியினரும் அதனைப் பயன்படுத்த வழிசமைக்க வேண்டும். இவ்விடத்தில் வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்று புகழப்படும் அளவிற்கு அருமையான பல விடயங்களை அழியாத இலக்கியமாகத் தந்துள்ளார் என்பது புலனாகின்றது. அந்த வகையில் "இயற்கை வளங்களும் திருக்குறளும்" என்னும் இவ்வாய்வக் கட்டுரையானது இவ்விடயம் தொடர்பான மேலும் ஆய்வுகளைப் பல ஆய்வாளர்கள் மேற்கொள்வதற்கு வழிகாட்டியாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

உசாத்துணை நூல்கள் :

இந்திரகுமாரி.தே, 2018, "இயற்கைப் பின்னணியில் திருக்குறளும் ஜப்பானிய ஹைக்கூக் கவிதைகளும்", இரண்டாவது அனைத்துலகத் திருக்குறள் மாநாடு வெளியீடு, லிவப்பூல் கோப் பல்கலைக்கழகம், லண்டன், ப.411 – 412

பூலோகம் செல்வதியம்மா, (2017), "திருக்குறள் விதந்துரைக்கும் இயற்கை", மணற்கேணி, கோகுலம் வெளியீடு. ப.109 – 113

அந்தோணிராஜ்.தை, 2011, " திருக்குறளில் மழை", வான்புகழ், ப.635 – 640

வேல்நம்பி.தி. (2009), "திருக்குறளில் ஊழியரிடல்", திருக்குறளும் முகாமைத்துவமும் ஓர் ஒப்பீட்டு ஆய்வு, ப.66 – 76

சுரேஷ்.கோ, 2008, "வள்ளுவரும் வாழ்வியலும்", நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், (பி) லிட், ப.48-50, 104 – 106

முருகரத்தனம்.தி, 1973, "குறள் கண்ட பொருள் வாழ்வு", மதுரைப் பல்கலைக் கழகம், ப.181.